**கவனிக்க.-** *16.03.2012 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (III) மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*
**கவனிக்க.-** இவ்வர்த்தமானியின் பகுதி (IV அ) மற்றும் பகுதி (IV ஆ) இன சிங்கள மற்றும் ஆங்கில மொழிப் பிரதிகள் தனியாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1751 - 2012 මාර්තු මස 23 වැනි සිකුරාදා - 2012.03.23**

*1751 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - | கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | 730 | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - | | - |
| பதவிகள் - வெற்றிடம் | - | | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2012, மாச்சு மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2012, மாச்சு மாதம் 16 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2012 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# மாகாண சபை அறிவித்தல்கள்

### அதிகாரம் அளிக்கும் கட்டளை

வடமத்திய மாகாண சபையின் 2009 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்கத்தைக் கொண்ட கூட்டுறவுச் சங்க சாசனத்தின் மூலம் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி வடமத்திய மாகாண கூட்டுறவு, வியாபாரம், உணவு, நெசவுக் கைத்தொழில், கிராம அபிவிருத்தி, கைத்தொழில் மற்றும் வீடமைப்பு அமைச்சர் ஹேரத் பண்டா சேமசிங்க ஆகிய நான், வடமத்திய மாகாண மாகாண சபையின் 2011 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கத்தைக் கொண்ட கூட்டுறவுச் சங்கத்தின் திருத்தப்பட்ட சாசனத்துடன் கூறப்பட்டுள்ள 2009 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்கத்தைக் கொண்ட கூட்டுறவுச் சங்க சாசனத்தின் அதிகாரங்களில் வடமத்திய மாகாணத்தின் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மற்றும் பதிவாளருக்கு உதவுமுகமாக கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பதவியின் கடமைகளை ஆற்றுவதற்கு நியமிக்கப்பட்டுள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையின் நிரல் I இல் குறிப்பிடப்பட்டுள்ளவரிடம் அவ் அட்டவணையின் நிரல் III இல் குறிப்பிடப்பட்டுள்ள சகல அதிகாரங்களையும் நிரல் II இல் குறிப்பிடப்பட்டுள்ள திகதியிலிருந்து இத்தால் அளிக்கின்றேன்.

ஹேரத் பண்டா சேமசிங்க,
கூட்டுறவு, வியாபாரம், உணவு, நெசவுக் கைத்தொழில்,
கிராம அபிவிருத்தி, கைத்தொழில் மற்றும்
வீடமைப்பு அமைச்சரும்,
வடமத்திய மாகாண மாகாண சபை.

2012.02.29.

### அட்டவணை

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| 1. சுபசிங்க தேசபிரியகே ஜயசிரி ஹத்னாகொட | 2011.04.27 | வடமத்திய மாகாண சபையின் 2011 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கத்தைக் கொண்ட கூட்டுறவுச் சங்க சாசனத்துடன் கூறப்பட்டுள்ள 2009 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்கத்தைக் கொண்ட கூட்டுறவுச் சங்க சாசனத்தின் 03, 04, 05, 06, 07, 08, 33, 44, 45, 52, 53, 54, 55, 56, 57, 58, (58(3), 58(4), 58(5)) தவிர 59, (59(1)ஆ தவிர), 60(1), 60(2), 68 ஆம் சரத்துக்களின்கீழ் பதிவாளரின் அதிகாரங்கள் மற்றும் 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்கத்தைக் கொண்ட கூட்டுறவுச் சங்க கட்டளைச் சட்டத்தின் 61 ஆவது சரத்தின்கீழ் ஆக்கப்பட்டுள்ள 1973 ஆம் ஆண்டின் கூட்டுறவுச் சட்டதிட்டங்களின் 04, 11, 16(II), 18, 19, 20, 27, 32, 33, 35, 37, 39, 40, 41, 42, 43, 48, 49 (49 XII தவிர) 51, 52 மற்றும் 53 ஆம் சட்டங்களின்கீழ் பதிவாளரின் சகல அதிகாரங்களும். |

3-803

---

### 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்துடன் வாசிக்கப்படுகின்ற 1983 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கமும் 1992 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) சட்டங்களினால் திருத்தப்பட்ட 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலகக் கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின்கீழான கட்டளை

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலகக் மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்துடன் வாசிக்கப்படுகின்ற 1983 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கமும், 1992 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) சட்டங்களினால் திருத்தப்பட்ட 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 2(2) ஆம் பிரிவினால் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் வடமேல் மாகாண சபையின் முதலமைச்சரும் நிதி, திட்டமிடல், நீதியும் சமாதானமும், உள்ளூராட்சி மன்றமும் மாகாண நிருவாக, மனிதவள, கல்வியும் கலாச்சார நடவடிக்கை, காணி, போக்குவரத்து, சூழல், சுற்றுலா, முதலீட்டு நடவடிக்கை, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் உணவு வழங்கலும் விநியோக அமைச்சர் அதுல சரத் குமார விஜேசிங்ஹ ஆகிய நான், வடமேல் மாகாணத்தின் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் பதிவாளருக்கு உதவுவதற்காக நியமிக்கப்பட்டுள்ளதும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையின் I ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளவர்களுக்கு 1983 ஆம் ஆண்டின்

*32 ஆம் இலக்கமும், 1992 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்க (திருத்த) சட்டங்களினால் திருத்தப்பட்ட 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்க சட்டமும் அதன்கீழ் விதிக்கப்பட்டுள்ள விதிகளின்கீழ் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் பதிவாளருக்கு விதிக்கப்பட்டுள்ள உரிய அட்டவணையின் III நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள எல்லா அதிகாரம் உரிய அட்டவணையின் II ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதி தொடக்கம் இத்துடன் கையளிக்கின்றேன்.*

அதுல சரத்குமார விஜேசிங்ஹ,
முதலமைச்சரும்
நிதி, திட்டமிடல், நீதியும் சமாதானமும், உள்ளூராட்சி மன்றமும்
மாகாண நிருவாக, மனிதவள, கல்வியும் கலாச்சார நடவடிக்கை,
காணி, போக்குவரத்து, சூழல், சுற்றுலா, முதலீட்டு நடவடிக்கை,
கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் உணவு வழங்கலும் விநியோக
அமைச்சரும்,
வடமேல் மாகாண மாகாண சபை.

2012.02.27.

**அட்டவணை**

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| 1. பெதியாகொட ஜோன் ரணசிங்ஹ ஆரச்சிகே விஸ்வபிரிய சிங்தன ரணசிங்ஹ | 2012.01.19 | கூட்டுறவுச் சங்க சட்டத்தின் 3, 5, 6, 7, 8, 9, 33, 39, 44, (44(6) தவிர) 45, 46, 48, 49, 50, 52, 53, 54, 58 (58(3) மற்றும் 58(5) தவிர) 59, 68 மற்றும் 72 ஆகிய பந்தியின்கீழ் ஆணையாளரும் பதிவாளரினால் எல்லா அதிகார விதிகளின் 4, 11, 15, 16(II), 18, 19, 27, 32, 33, 35, 37, 39, 40, 41, 42, 43, 48, 49 (49(XII) தவிர) 51, 52 மற்றும் 53 இற்கான விதிகளின்கீழ் ஆணையாளரும் பதிவாளரினால் எல்லா அதிகாரமும். |

3-921

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.